## விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## கற்றல் பயிற்சித்தாள்

**வகுப்பு: ஐந்து** **தமிழ்**

## செய்யுள்

**அ. பொருள் தருக:**

1.பாகு - வெல்லதில் காய்ச்சிய பாகு 2.வலார் - வல்லவர்கள்

3.கழை - கரும்பு 4.திரை - அலை 5.எண்ணுதல் - நினைத்தல்

**ஆ. எதிர்ச்சொல் எழுதுக:**

1.வேண்டாம் x வேண்டும் 2.நினைத்து x மறந்து

3.அருகில் X தொலைவில் 4.ஒற்றுமை x வேற்றுமை

5.சிறப்பு x இழிவு

**இ. பிரித்து எழுதுக:**

1.என்னுயிர் - என் + உயிர் 2.மகிமையெலாம் - மகிமை + எலாம்

3.அறிவுடையார் - அறிவு + உடையார் 4.இவ்வுலகம் - இ + உலகம்

5.திரும்பத்திரும்ப - திரும்ப + திரும்ப

**ஈ. சேர்த்து எழுதுக:**

1.மீன் + உலகம் - மீனுலகம் 2.குளிர் + இள - குளிரிள

3.கனி + இடை - கனியிடை 5.பனி + மலர் - பனிமலர்

**உ. அடக்கம் எனத் தொடங்கும் மூதுரை பாடலை அடிபிறழாமல் எழுதுக:**

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்

கடக்க கருதவும் வேண்டா- மடைத்தலையில்

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்

வாடி இருக்குமாம் கொக்கு.

**ஊ. தமிழின் இனிமை பாடலில் வரும் வருணனை சொற்களை எழுதுக:**

கனியிடை , பனிமலர் , நனிபசு , இனியன

**எ. பொருத்துக:**

1.உறுமீன் - அலைகள் -3

2.நனி - பெரிய மீன் -1

3.திரைகள் - மிகுதி - 2

4.சாறு - பசு - 5

5.பால் - கரும்பு - 4

**ஏ. வினாவிற்கு விடை எழுதுக:**

1. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?

எண்ணில்லாத மீன் வளங்களையும்,விலை மதிப்புடைய முத்துகளையும் , சிப்பிகளையும் நமக்கு அளிக்கிறது.

2. பாரதிதாசன் எங்கு பிறந்தார்?

பாரதிதாசன் புதுச்சேரியில் பிறந்தார்.

## உரைநடை

**அ. பொருள் தருக:**

1. ஓட்டை - துவாரம் 2. இம்மை - இப்பிறவி

**ஆ. பிரித்து எழுதுக:**

1. ஐயமில்லை - ஐயம் + இல்லை 2. தேனிசை - தேன் + இசை

3. செந்தமிழ் - செம்மை + தமிழ் 4. கவியரங்கம் - கவி + அரங்கம்

5. நற்றமிழ் - நன்மை + தமிழ்

**இ. சேர்த்து எழுதுக:**

1.அமைதி + ஆகி - அமைதியாகி

2.கற்று + அறிந்தவன் - கற்றறிந்தவன்

3.காரணம் + ஆகின்றது - காரணமாகின்றது

4.பொருள் + செல்வம் - பொருட்ச்செல்வம்

5.பழமை + மொழி - பழமொழி

**ஈ. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1.விரலுக்குத் தகுந்த <u>வீக்கம்</u>

2.மின்னுவதெல்லாம் <u>பொன்னல்ல.</u>

3.யானைக்கும் <u>அடி</u> சறுக்கும்.

4.ஆழம் தெரியாமல் <u>காலை</u> விடாதே.

5.ஆத்திரக்காரனுக்குப் <u>புத்தி</u> மட்டு.

**உ. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. பழமொழி என்பது யாது?

பழமொழி என்பது, நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள். பழங்காலம் முதற்கொண்டு தொண்டு தொட்டு பழமொழிகள் வழங்கி வருகின்றன.

2.செழியன் கனவில் என்னென்ன ஒலிகளைக் கேட்டான்?

செழியன் குரங்குகள் அலப்பும் ஒலியையும் ,குயில் கூவும் ஓசையும், சிங்கம் முழங்கும் சத்தத்தையும், பறவைகள் இறக்கைகளைப் படப்படவென அடிப்பதையும், யானை பிளிறுவதையும் ஆந்தை அலறுவதையும் , மயில் அகவியதையும் பாம்பு சீறியதையும், குதிரை கனைத்ததையும் கேட்டான்.

3. வேலியில் மாட்டிக்கொண்ட மானை காகம் எவ்வாறு காப்பாற்றியது?

விளைச்சல் நிலத்தில் வேலியில் மாட்டிக்கொண்ட மானை இறந்துவிட்டது என நினைத்து விவசாயி வேலியில் இருந்து மானை விடுவித்து வீட்டுக்கு எடுத்துச் செல்வோம் எனச் சொல்லிக் கொண்டே வேலியில் இருந்து மானை விடுவித்தான். காகம் கரைந்தது . அதுவரை காகத்தின் அறிவுரைப்படி இறந்தவாறு நடித்துக் கொண்டிருந்த மான் கண்ணிமைக்கும் நேரத்தில் துள்ளிப் பாய்ந்து ஓடித் தப்பித்தது.

4. கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம் என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை எழுதுக

கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு .கல்வி செல்வம் இம்மைக்கும் ,மறுமைக்கும் பயன் தருவது இன்றைய கல்வி வளர்ச்சி தான் எல்லா முன்னேற்றத்திற்கும் காரணம். நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நல்வழியில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள வழி செய்கிறது என மலர்விழி கல்வியின் சிறப்பை கூறினாள்.

**ஊ. சரியான விடையை எழுதுக:**

(வளம் , கல்வி , இவ்வுலகம்)

1.பொருளால் நம் வாழ்வு <u>வளம்</u> பெறும்

2..பொருளில்லாருக்கு <u>இவ்வுலகம்</u> இல்லை.

3.கேடில் விழுச்செல்வம் கல்வி

## எ. பொருத்துக:

1. Cyclone -மாமரம் -3
2. Pearl - புயல் -1
3. mango tree - முத்து -2

## இலக்கணம்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. புலி குரங்கைப் பார்த்து பிளிறியது.( பிளிறியது/ உரிமியது)
2. ‘ பூப் பறித்தாள் ‘என்பது வினை மரபு (ஒலி மரபு , வினை மரபு )

## ஆ. சொற்களை வரிசைப்படுத்தி தொடர் அமைக்க:

1. பசி போகும் பத்தும் வந்திட பறந்து

பசிவந்திட பத்தும் பறந்து போகும்.

2. சிறப்பு சென்ற இடமெல்லாம் கற்றவருக்கு கல்வி

கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

## இ. வினாவிற்கு விடை எழுதுக:

1.மரபுச் சொற்கள் என்றால் என்ன?

நம் முன்னோர்கள் ஒரு சொல்லைச் சொல்லியவாறே நாமும் சொல்லுவது மரபாகும்.

2. எழுவாய் என்றால் என்ன?

ஒரு தொடரில் யார் ,எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் எனப்படும் .எழுவாய் எப்போதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும்..

**ஈ. குடிநீர் குழாய் பழுது நீக்க வேண்டி ஊராட்சி மன்ற தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக:**

அனுப்புநர்:

செல்வி,

யாதவர் மேல தெரு,

பொள்ளாச்சி.

பெறுநர்:

ஊராட்சி மன்ற தலைவர்,

ஊராட்சி மன்ற அலுவலகம்,

பொள்ளாச்சி.

பொருள்:(பழுதடைந்த குடிநீர் குழாயை சரி செய்து தரக் கோருதல் சார்ந்து)

ஐயா, வணக்கம், எங்கள் தெருவில் உள்ள குடிநீர் குழாய் உடைந்து பழுதாகி உள்ளதால் கடந்த இரண்டு நாட்களாக தெருவில் குடிநீர் வீணாகி கொண்டிருக்கிறது. மேலும் தண்ணீர் இன்றி எங்கள் தெருவில் வசிப்போர் துன்பப்படுகின்றனர். எனவே பழுதடைந்துள்ள குடிநீர் குழாயை சரி செய்து தர வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் .

நன்றி

இடம்: பொள்ளாச்சி. இப்படிக்கு,

நாள்: 7.9.26. தங்கள் உண்மையுள்ள,

செல்வி

**உ. பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக:**

ஆதன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான் சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பதே அவன் ஆசை. ஒருநாள், அவன் பட்டம் விட்டுக்கொண்டு இருந்தான் அப்போது அவனுடைய தந்தை அங்கு வந்தார். இந்த பட்டத்தை பார்க்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறது என கேட்டார் .அதற்கு ஆதன் இந்த நூல் பட்டத்தின் சுதந்திரத்தை தடுத்துக் கொண்டிருக்கிறது என்றாள் .உடனே அவன் தந்தை பட்டத்தின் நூலை அறுத்துவிட்டார் .பட்டம் அங்கும் இங்கும் பறந்து சற்றென்று கீழே விழுந்தது. அந்த நூல் தான் பட்டத்தின் சுதந்திரத்தை தடுக்கிறது என்று நீ நினைத்தாய் அல்லவா ?பார் ,நூல் அருந்ததும் நிலைத்தடுமாறி, அந்த பட்டம் கீழே விழுந்து விட்டதே! இது போலத்தான் நம் வாழ்க்கையும் நூலற்ற பட்டமாக இருந்தால் நாமும் வாழ்வில் தடுமாறு கூடும் என்று கூறினார்.

**வினா விடை:**

1. ஆதன் என்ன செய்து கொண்டு இருந்தான்?
   ஆதன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.
2. ஆதனின் ஆசை என்ன?
   சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பது ஆதனின் ஆசை.
3. நூல் அறுபட்டதும் பட்டத்தின் நிலை என்ன ஆனது?
   அங்கும் இங்குமாகப் பறந்து கீழே விழுந்தது.
4. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்டது என்ன ?
   எழுதுக?

நம் வாழ்க்கையும் நூலற்ற பட்டமாக இருந்தால் நாமும் வாழ்வில் தடுமாற கூடும் என்பது கதையின் மூலம் நான் அறிந்து கொண்டது.

5. கதைக்கு ஏற்ற தலைப்பு ஒன்று எழுது?
   பட்டமும் வாழ்க்கையும்